**மேல்நிலை இரண்டாம் ஆண்டு இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு – 2025**

**தூத்துக்குடி மாவட்டம்**

**பாடம்: வேதியியல்** **விடைக்குறிப்பு** **மதிப்பெண்கள்: 70**

**நேரம்: 3.00 மணி**

## பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (15 X 1 = 15)**

| Q.no | குறியீடு | விடைகள் |
|---|---|---|
| 1. | ஆ | $Al_2O_3$ |
| 2. | ஈ | இரண்டும் சரி, காரணமானது கூற்றினை விளக்கவில்லை. |
| 3. | அ | $H_3PO_3$ |
| 4. | அ | Np, Pu, Am |
| 5. | இ | ஆக்சலேட்டோ |
| 6. | இ | இரண்டும் சகப்பிணைப்பு படிகங்கள் |
| 7. | ஈ | 3 mol $min^{-1}$ |
| 8. | அ | (i) – C, (ii) – D, (iii) – A, (iv) – B |
| 9. | அ | 5F |
| 10. | ஆ | பால்மம் |
| 11. | அ | பீனால் |
| 12. | இ | ஹெக்சேன் டையாயிக் அமிலம் |
| 13. | ஈ | 1,3 – டைநைட்ரோ பென்சீன் |
| 14. | ஆ | யுராசில் |
| 15. | ஆ | பாலி அமைடு |

www.Padasalai.Net

## பகுதி – II

**குறிப்பு: ஏதேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் வினா எண்: 24 க்கு கட்டாயம் விடையளிக்கவும். (6 x 2 = 12)**

| | | | |
|---|---|---|---|
| 16. | **ஹைட்ரோபோரேற்றம்:**<br>$B_2H_6 + 6\,RCH{=}CHR \xrightarrow{\text{ஈதர்}} 2(RCH_2{-}CHR)_3B$<br>**(அல்லது)**<br>$6CH_3{-}CH{=}CH_2 + B_2H_6 \longrightarrow \underset{\text{டிரைபுரப்பைல்போரேன்}}{2(CH_3{-}CH_2{-}CH_2)_3B}$<br>$(CH_3{-}CH_2{-}CH_2)_3B + 3H_2O_2 \xrightarrow{OH^-} \underset{\text{புரப்பன் -1- ஆல்}}{3CH_3{-}CH_2{-}CH_2{-}OH} + B(OH)_3$<br>சரியான சமன்பாடு (அல்லது) விளக்கம் - 2 மதிப்பெண்கள் | 2 | 2 |
| 17. | **(a) $BrF_5$ –** ஐங்கோன இருபிரமிடு<br>**(b) $BrF_3$ –** T – வடிவம் | 1<br>1 | 2 |

**18.**

$[Co(NH_3)_5Cl]SO_4 \xrightarrow{BaCl_2}$ வெள்ளை நிற வீழ்படிவு — 1

$[Co(NH_3)_5SO_4]Cl \xrightarrow{AgNO_3}$ வெள்ளை நிற வீழ்படிவு — 1

மதிப்பெண்: 2

**19.**

| | **எண்முகி வெற்றிடங்கள்** | **நான்முகி வெற்றிடங்கள்** |
|---|---|---|
| 1 | ஆறு கோளங்களை கொண்டது | நான்கு கோளங்களை கொண்டது |
| 2 | உருவாகும் எண்முகி வெற்றிடங்களின் எண்ணிக்கை n | உருவாகும் நான்முகி வெற்றிடங்களின் எண்ணிக்கை 2n |
| 3 | கீழடுக்கில் 3 கோளங்களும், மேலடுக்கில் 3 கோளங்களும் உள்ளது. | கீழடுக்கில் 3 கோளங்களும், மேலடுக்கில் ஒரு கோளமும் உள்ளது. |
| 4 | ஆறு கோளங்களின் மையங்களை இணைக்கும்போது ஒரு எண்முகி உருவாவதால் ஏற்படும் வெற்றிடம் | நான்கு கோளங்களின் மையங்களை இணைக்கும்போது ஒரு நான்முகி உருவாவதால் ஏற்படும் வெற்றிடம் |

மதிப்பெண்: 2 — 2

**20.**

**அமிலம்** - புரோட்டான் வழங்கி — ½

**காரம்** - புரோட்டான் ஏற்பி — ½

**வரம்புகள் :** $BF_3$, $AlCl_3$ போன்ற புரோட்டான்களை வழங்க இயலாத சேர்மங்களின் அமிலப்பண்பினை விளக்கவில்லை. — 1

மதிப்பெண்: 2

**21.**

| **ஒரு படித்தான வினைவேக மாற்றம்** | **பல படித்தான வினைவேக மாற்றம்** |
|---|---|
| வினைபடு பொருட்கள், வினைவிளை பொருட்கள் மற்றும் வினைவேக மாற்றி ஆகியவை ஒரே நிலைமையில் இருக்கும். | வினைபடு பொருட்கள், வினைவிளை பொருட்கள் மற்றும் வினைவேக மாற்றி ஆகியவை வெவ்வேறு நிலைமையில் இருக்கும் |
| **எ.கா** $2SO_{2(g)} + O_{2(g)} \xrightarrow{NO_{(g)}} 2SO_{3(g)}$ | **எ.கா** $N_{2(g)} + 3H_{2(g)} \xrightarrow{Fe_{(s)}} 2NH_{3(g)}$ |

மதிப்பெண்: 1 + 1 — 2

**22.**

**A** - 

(அல்லது) பீனைல் பென்சோயேட் — 1

**B** - 

(அல்லது) 4 - நைட்ரோ பீனைல் பென்சோயேட் — 1

மதிப்பெண்: 2

**23.**

- நீல லிட்மஸை சிவப்பாக மாற்றுகிறது.
- $Na_2CO_3$ உடன் நுரைத்துப் பொங்குகிறது.
- ஆல்கஹால் உடன் அடர் $H_2SO_4$ முன்னிலையில் எஸ்டரைக் கொடுக்கிறது.

**(ஏதேனும் இரண்டு சோதனைகள் - 2 M)**

மதிப்பெண்: 2 — 2

**24.**

$C_6H_5NH_2 < C_6H_5N(CH_3)_2 < CH_3NH_2 < (C_2H_5)_2NH$

9.376 > 8.92 > 3.38 > 3.00 ⟹ $pK_b$ மதிப்பு

மதிப்பெண்: 2 — 2

## பகுதி – III

**குறிப்பு: ஏதேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும் வினா எண்: 33 க்கு கட்டாயம் விடையளிக்கவும். (6 x 3 = 18)**

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 25. | • **தாது மற்றும் மாசுக்களின் காந்தப் பண்புகளில் காணப்படும் வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டது.**<br>• **பெர்ரோ காந்தத் தன்மையுள்ள தாதுக்கள்** அடர்பிக்கப்படுகிறது.<br>• **உல்ப்ரமைட் மாசுவிலிருந்து வெள்ளீயக்கல்** தாது பிரித்தெடுக்கப் படுகிறது.<br>• நன்கு தூள் செய்யப்பட்ட தாது மின்காந்தப் பிரிப்பான் மீது விழுமாறு செய்யப்படுகிறது.<br>• மின்காந்தப் பிரிப்பான் சக்கரங்களின் வழியே ஒரு நகரும் பட்டை இயங்குகிறது.<br>• தாதுவில் உள்ள காந்தத் தன்மையுள்ள தாதுக்கள் சக்கரங்களுக்கு அருகில் விழுகிறது.<br>• காந்தத் தன்மையற்ற தாதுக்கள் மற்றும் மாசுக்கள் சக்கரங்களுக்கு அப்பால் விழுகிறது.<br><br> | 1<br>1<br>1 | 3 |
| 26. | $4NaCl + MnO_2 + 4H_2SO_4 \longrightarrow Cl_2 + MnCl_2 + 4NaHSO_4 + 2H_2O$<br>**சரியான சமன்பாடு – 3 M ; விளக்கம் மட்டும் - 1 M** | 3 | 3 |
| 27. | **(n-2)f ஆர்பிட்டாலில்** இறுதி எலக்ட்ரான் வந்து சேரும் தனிமங்கள் உள் இடைநிலை தனிமங்கள் எனப்படும். | 3 | 3 |
| 28. | **வினையின் வேகம்,** வினைவேக மாறிலி மற்றும் வினைபடு பொருள்களின் செறிவு ஆகியவற்றை தொடர்புபடுத்தும் சமன்பாடு வினைவேக விதி எனப்படும். **(அல்லது)**<br>**வினைவேகம் = K [A] [B]**<br>வினைபடு பொருள்களின் செறிவு ஒரு மோல் ஆக உள்ளபோது வினையின் வேகமானது **வினைவேக மாறிலிக்குச்** சமம். | 1 ½<br>1 ½ | 3 |
| 29. | வலிமை குறைந்த மின்பகுளியுடன் ஒரு பொது அயனியை கொண்டுள்ள உப்பை சேர்க்கும்போது அந்த வலிமை குறைந்த மின்பகுளியின் பிரிகை வீதம் குறைகிறது. இது பொது அயனி விளைவு எனப்படும் | 3 | 3 |
| 30. | **∴பாரடே முதல் விதி**<br>மின்னாற் பகுத்தலின் போது மின்வாயில் படியும் பொருளின் நிறை (m), மின்பகுளியின் வழியே செலுத்தப்படும் மின்னோட்டத்துக்கு (Q) நேர் விகிதத்தில் இருக்கும்.<br>**(அல்லது)**<br>**m α Q (or) m α It (or) m = ZIt - 1 M**<br>**∴பாரடே இரண்டாம் விதி**<br>ஒரே அளவு மின்னோட்டத்தை வெவ்வேறு மின்பகுளிக் கரைசலின் வழியே செலுத்தும்போது மின்முனைகளில் விடுவிக்கப்படும் பொருளின் அளவு அவற்றின் மின்வேதிச் சமான நிறைக்கு நேர் விகிதத்தில் இருக்கும். **(அல்லது)**<br>**m α Z** (அல்லது) $\frac{m_1}{Z_1} = \frac{m_2}{Z_2} = \frac{m_3}{Z_3}$ **- 1 M** | 1 ½<br>1 ½ | 3 |

www.Padasalai.Net

<table>
<tr><td>31.</td><td>

**பெர்கின் வினை**

ஒரு அரோமேடிக் ஆல்டிஹைடை, ஒரு அலிஃபாடிக் அமில நீரிலியுடன் சேர்த்து ஒரு அமில நீரிலியுடன் தொடர்புடைய அமிலத்தின் சோடியம் உப்பின் முன்னிலையில் வெப்பப்படுத்தும்போது குறுக்க வினை நிகழ்ந்து ஒரு α, β நிறைவுறா அமிலம் பெறப்படுகிறது. இந்த வினையானது **பெர்கின் வினை** என அறியப்படுகிறது.

**எடுத்துக்காட்டு:**




**அல்லது**

**நோவெநஜல் வினை**




பிரிடின் முன்னிலையில் பென்சால்டிஹைடு ஆனது மலோனிக் அமில மூலக்கூறுடன் குறுக்க வினைக்கு உட்பட்டு சின்னமிக் அமிலத்தை தருகிறது. இவ்வினையில் பிரிடின், கார வினைவேக மாற்றியாக செயல்படுகிறது.

**சரியான சமன்பாடு – 3 M ; விளக்கம் மட்டும் - 1 M ; பெர்கின் வினையில் $CH_3COONa$ குறிப்பிடவில்லை எனில் - 2 M (அல்லது) நோவெநஜல் வினையில் பிரிடின் குறிப்பிடவில்லை எனில் - 2 M**
</td><td>3</td><td>3</td></tr>
<tr><td>32.</td><td>

- ஒரு புரதம் அதன் முதல்நிலை அமைப்பு பாதிக்கப்படாமல் உயர்நிலை அமைப்பை மட்டும் இழக்கும் நிகழ்வு இயல்பிழத்தல் எனப்படும்.
- இதனால் உயிரியல் செயல்பாடுகள் முற்றிலும் இழக்கப்படுகிறது
- உயர் வெப்பநிலை அல்லது கரைசலின் pH ஐ மாற்றுவதால் இந்த இடையீடுகளை சிதைக்க முடியும்.
</td><td>1<br>1<br>1</td><td>3</td></tr>
<tr><td>33.</td><td>

(i) பென்சீன்டையசோனியம் குளோரைடை, ஹைட்ரோ குளோரிக் / ஹைட்ரோபுரோமிக் அமிலம் மற்றும் காப்பர் தூளுடன் சேர்த்து வினைபடுத்துவதன் மூலமும் குளோரோ / புரோமோ அமீன்களைப் பெறலாம்.




(ii) சோடியம் ஹைட்ராக்ஸைடு முன்னிலையில், பென்சீன்டையசோனியம் குளோரைடானது பென்சீனுடன் வினைபுரிந்து பைபீனைலைத் தருகிறது. இவ்வினை காம்பெர்க் வினை எனப்படும்.




**இரண்டு வினைகளுக்கும் சரியான சமன்பாடு எழுதியிருந்தால் - 1 ½ + 1 ½**

**விளக்கம் மட்டும் - 1 + 1**
</td><td>1 ½<br>1 ½</td><td>3</td></tr>
</table>

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் (5 x 5 = 25)**

<table>
<tr><td>34. அ</td><td>

(i)

- எளிதில் ஆவியாகும் சேர்மத்தை தரும் காரணியுடன் உலோகம் வினைப்படுத்தபடுகிறது.
- ஆவியான சேர்மத்தை சிதைவடையச் செய்து தூய உலோகம் பெறப்படுகிறது
</td><td>1<br>1</td><td></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | (ii) **எலிங்கம் வரைபடத்திலிருந்து உணரப்படுபவை**<br>✓ உலோக ஆக்சைடு உருவாகும் வினைக்கு நேர்குறி மதிப்பு சாய்வு கிடைக்கிறது. ΔS எதிர்குறி மதிப்பை பெறுகிறது.<br>✓ கார்பன் மோனாக்சைடு உருவாகும் வினைக்கு எதிர்குறி மதிப்பு சாய்வு கிடைக்கிறது. ΔS நேர்குறி மதிப்பை பெறுகிறது. எனவே கார்பன் மோனாக்சைடு அதிக வெப்பநிலையிலும் அதிக நிலைப்புத் தன்மையுடையது.<br>✓ MgO போன்ற சில உலோக ஆக்சைடுகளுக்கு ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் சாய்வில் திடீரென மாற்றம் ஏற்படுகிறது. இதற்கு நிலைமாற்றம் காரணமாகும். | **1**<br>**1**<br>**1** | **5** |
| 34. ஆ | (i)<br>• நீரை தூய்மையாக்க பயன்படுகிறது.<br>• நீர் ஒட்டாத ஆடைகள் தயாரிக்க பயன்படுகிறது.<br>• காகிதம் தயாரிக்க பயன்படுகிறது.<br>• இரத்த கசிவை தடுக்கும் மருந்தாக பயன்படுகிறது.<br>**ஏதேனும் இரண்டு பயன்கள் - 2 M**<br>(ii) ஒரு தனிமத்தின் அணுச்சங்கிலி உருவாக்கும் திறன் சங்கிலித் தொடர் ஆக்கம் எனப்படும். கார்பன் ஆனது C, H, N, S அணுக்களுடன் சேர்ந்து சங்கிலி பிணைப்பை உருவாக்கும்.<br>**நிபந்தனைகள் :**<br>• தனிமத்தின் இணைதிறன் இரண்டு அல்லது அதற்குமேல் இருக்கவேண்டும்.<br>• அதே தனிமத்துடன் சுய பிணைப்பை ஏற்படுத்த வேண்டும்.<br>• சுய பிணைப்பு வலிமையானதாக இருக்கவேண்டும்.<br>• மற்ற மூலக்கூறுகளுடன் வினைபுரிவதில் மந்தத் தன்மையாக இருக்கவேண்டும். | **2**<br>**1**<br>**2** | **5** |
| 35. அ | (i)<br>• அணுக்களுக்கிடையே அதிக கவர்ச்சி விசை.<br>• வலிமையான உலோக பிணைப்பு.<br>(ii)<br>**அணைவு மாற்றியம்**<br>இரு அணைவுக்கோளங்களிலும் ஈனிகளின் பங்கீடு வேறுபடுவதால் உருவாகிறது.<br>$[Co^{III}(NH_3)_6][Cr(CN)_6]$ and $[Cr^{III}(NH_3)_6][Co^{III}(CN)_6]$<br>**இணைப்பு மாற்றியம்**<br>இரு வழி பிணைப்புறும் ஈனிகள் தன்னிடம் உள்ள வெவ்வேறு வழங்கி அணுக்களின் மூலம் மைய உலோக அயனியுடன் பிணைப்பினை ஏற்படுத்துவது.<br>**$[Co(NH_3)_5(NO_2)]^{2+}$ மற்றும் $[Co(NH_3)_5(ONO)]^{2+}$** | **1**<br>**1**<br>**1**<br>**½**<br>**1**<br>**½** | **5** |

www.Padasalai.Net

**35. ஆ**

(i) $t_{\frac{1}{2}} = \frac{0.6932}{k}$ — 1

**(அல்லது)**

$$t_{\frac{1}{2}} = \frac{0.6932}{1.54 \times 10^{-3}}$$

= 450 s — ½ + ½

(ii)

- கடினமானவை.
- நீரில் கரையும்.
- உருகுநிலை அதிகம்.
- திண்ம நிலையில் மின் கடத்தாது.
- உருகிய நிலையில் மின் கடத்தும்.

**ஏதேனும் மூன்று பண்புகள் - 3 M** — 3

Total: 5

**36. அ**

(i) DC மின்னோட்டம் பயன்படுத்தும்போது கரைசல் மின்னாற்பகுத்தலுக்கு உள்ளாகிறது. எனவே AC மின்னோட்டம் பயன்படுத்தப்படுகிறது. — 2

(ii) **சமானக் கடத்துதிறன்:**

**$\Lambda_{eq}(Al_2(SO_4)_3)$** = $\frac{1}{3}\lambda_{eq}(Al^{3+}) + \frac{1}{2}\lambda_{eq}(SO_4^{2-})$

(or)

= $\frac{1}{3} \times 189 + \frac{1}{2} \times 160$

= 143 மோ செ.மீ$^2$ சமானம்$^{-1}$ — 1 ½

**மோலார் கடத்துதிறன்:**

**$\Lambda_{eq}(Al_2(SO_4)_3)$** = $2\lambda_m(Al^{3+}) + 3\lambda_m(SO_4^{2-})$

(or)

= $2 \times 189 + 3 \times 160$

= 858 மோ செ.மீ$^2$ மோல்$^{-1}$ — 1 ½

Total: 5

**36. ஆ**

(i) **டிண்டால் விளைவு**

- கூழ்மத்துகள்கள் வழியே ஒளிக்கற்றையை செலுத்தினால் ஒளியின் தடம் புலப்படும். — 1
- **காரணம்:** கூழ்மத்துகள்களின் ஒளி சிதறடிக்கும் பண்பு. — 1

(ii)

| வேதிப்புறப்பரப்பு கவர்தல்அல்லது கிளர்வுறுத்தப்பட்ட பரப்பு கவர்தல் | இயற்புறப்பரப்பு கவர்தல்அல்லது வாண்டர்வால்ஸ் பரப்பு கவர்தல் |
|---|---|
| 1. இது மிக மெதுவாக நிகழ்கிறது. | 1. இது கணப்பொழுதில் நிகழ்கிறது |
| 2. இது அதிக தேர்ந்த செயல்முறையாகும். பரப்புப் பொருள் மற்றும் பரப்புகவர் பொருள் ஆகியவற்றின் தன்மையை பொருத்தமைகிறது. | 2. இது தேர்ந்த செயல்முறை அல்ல. |
| 3. அழுத்தம் அதிகரிக்கும்போது வேதிப்புறப்பரப்பு கவர்தல் வேகமாக நிகழ்கிறது, ஆனால், இது பரப்பு கவர்தலின் அளவை மாற்றுவதில்லை. | 3. இயற்புறப்பரப்புக் கவர்ச்சியில் அழுத்தம் அதிகரிக்கும்போது, பரப்பு கவர்தலின் அளவும் அதிகரிக்கிறது. |
| 4. வெப்பநிலையை அதிகரிக்கும்போது வேதிப்புறப்பரப்பு கவர்தல் முதலில் அதிகரித்து பின்னர் குறைகிறது. | 4. வெப்பநிலை அதிகரிக்கும்போது இயற்பரப்புக் கவர்ச்சி குறைகிறது. |
| 5. வேதிப்புறப்பரப்பு கவர்தலில் பரப்பு பொருளுக்கும், பரப்புகவர் பொருளுக்கும் இடையே எலக்ட்ரான் இடமாற்றம் நிகழ்கிறது. | 5. எலக்ட்ரான்கள் இடமாற்றம் நிகழ்வதில்லை |
| 6. பரப்பு கவர்தல் வெப்பம் அதிகம்.அதாவது 40 முதல் 400kJ/மோல் வரை. | 6. பரப்பு கவர்தல் வெப்பம் குறைவு. 40kJ/மோல் என்ற அளவிலேயே உள்ளது. |
| 7. பரப்பின் மீது பரப்புகவர் பொருளின் ஒற்றை அடுக்கு உருவாகிறது. | 7. பரப்பின் மீது பரப்புகவர் பொருளின் பலஅடுக்குகள் உருவாகின்றன. |
| 8. கிளர்வு மையங்கள் என்றழைக்கப்படும் சில குறிப்பிட்ட அமைவிடங்களில் மட்டும் பரப்பு கவர்தல்நிகழ்கிறது. இது புறப்பரப்பின் | 8. இது எல்லா இடங்களிலும் நிகழ்கிறது. |

**ஏதேனும் மூன்று வேறுபாடுகள் - 3 M** — 3

Total: 5

www.Padasalai.Net

<table>
<tr>
<td>37.<br>அ</td>
<td>

**(i) குளோரோபிக்ரின் தயாரித்தல்:**

$$CH_3-NO_2 + 3Cl_2 \xrightarrow{NaOH} CCl_3-NO_2 + 3HCl$$

Chloropicrin (trichloronitromethane)

**சரியான சமன்பாடு – 2 M ; NaOH குறிப்பிடவில்லை எனில் - 1 M**

**(ii)** அமில குளோரைடுகளை, பேரியம் சல்பேட் கொண்ட பெலேடியம் வினையூக்கி முன்னிலையில் ஹைட்ரஜனேற்றமடையச் செய்து ஆல்டிஹைடுகளை தயாரிக்கலாம். இவ்வினை **ரோசன் முண்ட் ஒடுக்க வினை** எனப்படும்

$$CH_3-\overset{\overset{O}{\|}}{C}-Cl + H_2 \xrightarrow{Pd/\,BaSO_4} CH_3-\overset{\overset{O}{\|}}{C}-H + HCl$$

**அசிட்டைல் குளோரைடு**     **ஆசிட்டால்டிஹைடு**

**சரியான சமன்பாடு – 3 M ; விளக்கம் மட்டும் - 1 M**

</td>
<td>2<br><br>3</td>
<td>5</td>
</tr>
<tr>
<td>37.<br>ஆ</td>
<td>

**உயிரினங்களில் லிபிட்டுகளின் செயல்பாடுகள்**

- லிப்பிட்டுகள் செல்களின் ஒருங்கிணைந்த ஆக்கக்கூறுகள்.
- உயிர் அமைப்புகளின் ஆற்றல் மூலங்கள்.
- நீர்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு அடுக்குகள்.
- இணைப்பு திசுக்களில் பாதுகாப்பு அடுக்குகள்.
- கொழுப்பு வளர்சிதை மாற்றத்தில் பால்மக்காரணிகள்.

</td>
<td>1<br>1<br>1<br>1<br>1</td>
<td>5</td>
</tr>
<tr>
<td>38.<br>அ</td>
<td>

**(i)**

<table>
<tr><th>புரை தடுப்பான்கள்</th><th>கிருமி நாசினிகள்</th></tr>
<tr><td>உயிருள்ள திசுக்களின் மீது பயன்படுத்தப்படுகிறது.</td><td>உயிரற்ற பொருட்களின் மீது பயன்படுத்தப்படுகிறது.</td></tr>
<tr><td>நுண்ணுயிர்களின் வளர்ச்சியை தடுக்கிறது.</td><td>நுண்ணுயிர்களின் வளர்ச்சியை தடுக்கிறது.</td></tr>
<tr><td>$H_2O_2$, போவிடோன்-அயோடின்</td><td>ஆல்கஹால், குளோரின் சேர்மங்கள்</td></tr>
</table>

**(ii)**

**ஆஸ்பிரின் (அசிட்டைல் சாலிசிலிக் அமிலம்)**




**பாராசிட்டமால் (அசிட்டமினோ∴பீன்)**




</td>
<td>2<br><br>1 ½<br>+<br>1 ½</td>
<td>5</td>
</tr>
</table>

www.Padasalai.Net

38. ஆ

$$\underset{\substack{\textbf{A}}}{CH_3CN} \xrightarrow[4\,[H]]{Na\,(Hg)\,/\,C_2H_5OH} \underset{\substack{\textbf{B}}}{CH_3CH_2NH_2}$$

ஈத்தேன் நைட்ரைல் → எத்தனமீன் — 1

$$\underset{\substack{\textbf{B}}}{CH_3CH_2NH_2} + HONO \xrightarrow{NaNO_2\ +\ \text{அடர்}HCl} \underset{\substack{\textbf{C}}}{CH_3CH_2OH}$$

எத்தனமீன் → எத்தனால் — 1

| சேர்மம் | மூலக்கூறு வாய்ப்பாடு | பெயர் | |
|---|---|---|---|
| **A** | **$CH_3CN$** | மெத்தில் சயனைடு / ஈத்தேன் நைட்ரைல் | 1 |
| **B** | **$CH_3CH_2NH_2$** | எத்தனமீன் | 1 |
| **C** | **$CH_3CH_2OH$** | எத்தனால் | 1 |

Total: **5**

www.Padasalai.Net